Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17    Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17
வேணு : 22    ஆகஸ்டு 2016    கானம் : 1



ஜூலை 25ஆம் தேதி காலை பாரத்வாஜ வேதாரண்ய வேத வித்யாபீட ப்ரதிஷ்டான டிரஸ்ட் (கோகர்ணா) சார்பில் யஜுர் வேத பாடசாலை ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சன்னதியில் துவக்கம் - ப்ரும்மஸ்ரீ மஹாபலேஷ்வர் கனபாடிகள் உடன்

NO FAME · NO SELF INTEREST · NO NAME · ONLY GOD

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar



ஸ்ரீ ஹரி:


தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 22    ஆகஸ்டு 2016    கானம் : 1

Delivered by India Post    www.indiapost.gov.in



ஜூலை 19 குருபூர்ணிமா - ப்ரேமிக ஜன்மஸ்தான் - சேங்கனூரில்



ஜூலை 15 விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் சன்னதி ஆஷாட ஏகாதசி





ஜூன் 28 திருவல்லிக்கேணி ஸ்ரீபாண்டுரங்கன் கோவில்
மண்டலாபிஷேக பூர்த்தி



மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலன் சன்னதியில்






UDYOG 2016 held at Bharatiya Vidya Bhavan
- Career guidance workshop with Chennai's best speakers, academicians and professional by **Global Organisation for Divinity** on July 2, 2016



International Retreat Camp
by Global Organisation for Divinity on July 22, 2016
at Dakshin Kalachitra, ECR



ஜூலை 11 - 20 சிதம்பரம் நாமத்வாரில் ஸ்ரீமத் ராமாயணம் - முரளிஜி





ஜூலை 17 குரோம்பேட்டை ஆஞ்சநேயர் கோவிலில் சத்சங்கம்



செங்கனூரில் புறப்பாட்டின்பொழுது



ஜூலை மாதம் - கனடா (டொரான்டோ) மற்றும் (சிகாகோ) அமெரிக்க நாடுகளில் சத்சங்கங்கள் - பூர்ணிமாஜி





ஜூலை 6 ஸ்ரீஜகன்னாதர் ரத யாத்திரை - கோவிந்தபுரத்தில்



ஜூலை 20-29
அகில பாரத சாமவேத சம்மேளனம்
ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் பெங்களூரு







ஜூலை 20-29
அகில பாரத சாமவேத சம்மேளனம்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் பெங்களூரு

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 22 ஆகஸ்டு 2016 கானம்: 1

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-245 | 05 | அகிலபாரத சாமவேத சம்மேளனம் | 27 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | ரூபகோஸ்வாமி | 33 |
| கெங்குவார்பட்டி கோபி | 09 | வீடு தேடி வருவான் விட்டலன் | 35 |
| ஆனி கருடன் சேவை | 11 | சனாதன புதிர் | 37 |
| | | பாலகர்களுக்கு ஒரு கதை | 38 |
| ப்ரேமிக ஜகன்னாத யாத்திரை | 15 | ப்ருந்தாவன கண்ணன் | 40 |


மனிதப்பிறவி என்பது அரிதானது; உத்தமமானது. இந்த உத்தமமான மனித பிறவியை, பெரியோர்களை அண்டி அவர்கள் காட்டிய வழியில் முயன்று, மேலும் சிரேயஸை அடைய உபயோகப்படுத்தாமல், அரிதான பிறவியை வீணாக்கி, பிறருக்கே உழைத்து, அதன் மூலம் தன் சரீரம் மற்றும் குடும்பத்தை காப்பாற்ற தன் ஆயுட்காலம் முழுவதும் செலவழித்து விடுபவன் மூடன்; இப்படிப்பட்டோர் நட்புக்காக காரியங்களை செய்கிறேன் என சொல்வதெல்லாம், பார்க்கப்போனால், பொய்யே ஆகும்.

- விதுர நீதி

## சத்சங்கம்

வாய்க்குமோ பூமியில் இப்படி ஒரு சத்சங்கம்
அரிதிலும் அரிதாம் அமுதமான இச்சத்சங்கம்
தேவரும் மூவரும் போற்றிடும் சத்சங்கம்
அனாதியாம் அந்த ப்ரம்மம் வீற்றிடும் சத்சங்கம்

ஆண்டாளும் மீராவும் வாழ்ந்திடும் சத்சங்கம்
உள்ளே உள்ளே உன்னை ஆழ்த்திடும் சத்சங்கம்
கள்ளமாம் வினை முழுவதும் வீழ்த்திடும் சத்சங்கம்
உள்ளத்தால் உயர்ந்த பக்தர் குழுமிடும் சத்சங்கம்

நாமமெனும் நல்மணியை நல்கிடும் சத்சங்கம்
பாமாவின் நாதனை பாடிடும் சத்சங்கம்
ஓயாமல் கண்ணன் களித்தாடும் சத்சங்கம்
சத்தியமாய் நம்மை கரை சேர்த்திடும் சத்சங்கம்

- திருமதி.உமாலக்ஷ்மி

*முன்அட்டை: ஜகன்னாதர் ரத யாத்திரை ஜூலை 6, 2016*

*பின் அட்டை- பாரத்வாஜ வேதாரண்ய வேத வித்யாபீட பிரதிஷ்டான் டிரஸ்ட் (கோகர்ணா) துவக்கம், பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சன்னதி ஜூலை 24, 2016*



# மதுரமான மஹநீயர் – 245

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்து பலன் அடைந்தோர் ஏராளம்; அடைந்து வருவோருக்கும் கணக்கில்லை. நம்மிடையே அப்படி பலன் பெறாதவர் யாராவது உண்டா என்ன? பலாப்பழம் வெளியில் முரடு. ஆனால் உள்ளே சுவை. அதுபோல உலக கஷ்டமுடன் ஒருவர் நாமம் சொல்லி விட்டால், கஷ்டமும் விலகி சாந்தியையும் சுகத்தையும் பெறுகின்றனர். குருவருளால் நாம் இதை நேரில் காண்கிறோம்.

சிவகாசியில் ஒரு பெண்மணி பரம கஷ்ட ஜீவனத்தில் வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள்; ஒரு ஆண் குழந்தை. அவர் கணவர், ஒரு தனியார் கம்பெனியில் சாதாரண வேலை பார்த்து வந்தார். ஒரு வேளை கூட நன்கு சாப்பிட முடியாத குடும்ப சூழல்.

கஷ்டத்தை முழுவதும் சொல்ல முடியாது; உறவினரிடம் தஞ்சம் புக மனம் ஒப்பாது. குழந்தைகளை பார்த்தால் கண்களில் நீர் கோர்த்து நிற்கும். குடும்பத்திலேயே மனம் விட்டு பேசி கொண்டாலும், பாரம் இறங்காமல் நெஞ்சம் கனக்கும். எந்த வேலை செய்தாலும், நமக்கு ஏன் இந்த நிலை என்ற கேள்வி தவறாமல் வந்து வாட்டும். இதுதான் அந்த நிலை. ஆனாலும் அந்த அம்மா, நாமாவை சொல்லி கொண்டே இருப்பார்.

புலியின் கண்களில் பட்ட ஆடு தப்புமோ? அது மரித்தே தீரும். அப்படியே குருவின் சொல்படி கேட்டு நடப்பவரின் கஷ்டம் படிப்படியாக குறைந்து அழிந்து மறைந்துதான் போகும்.

சமையல், வேறு வேலை, வெளி வேலை என இருந்தாலும் கஷ்டம் மறந்தே போகாது என்பதால், அவர் மனமும் குருவையும் நாமத்தையும் பிரார்த்தனையையும் மறக்கவே இல்லை. கஷ்டம்தான் பிணைத்தது போல; கஷ்ட நிவர்த்தியை ஒருவர் பிரார்த்திக்கலாம். ஆனால், அது எப்படி இருக்க வேண்டும் என நிர்ப்பந்திக்க முடியாது. அது

திருவருளை பொறுத்தது.

அப்படி ஒருநாள் வீட்டில் சாப்பிட ஒன்றுமே இல்லை என்ற நிலை வந்து விட்டது. அரிசி வைத்தாகி விட்டது. கையில் வெறும் ஐந்து ரூபாய். அதற்கு என்ன மதிப்பு இக்காலத்தில் இருக்கிறது? குழம்பு செய்ய தேவையான பொருட்களை அதை வைத்து வாங்க முடியுமா என்ன?


வாசலில் பார்த்தால், தயிர் விற்றவாறு போனார் ஒரு மூதாட்டி. ஆயர் குலம் தென்படுகிறதே? அவரிடம் ஐந்து ரூபாய்க்கு தயிர் வாங்கினார் இவர். அது, குழந்தைகளுக்கும் தமக்கும் தேவைக்கு விட அதிகமாக இருந்தது. உடல் குளிர்ந்த பின்தான், மனம் குளிர திருவுளமோ?

அடுத்த நாளிலிருந்து அந்த தயிர்க்காரம்மாவிடம் தயிர் வாங்கி அதை வைத்து சாப்பிடுவது என்றாகியது. இது அப்படியே வளர்ந்து அந்த தயிர்க்காரம்மா friend ஆகி விட்டார். அதிகம் தயிர் கொடுத்தாலும் ஐந்து ரூபாய்க்கு மேல் வாங்க மாட்டார் அந்த மூதாட்டி. போகப்போக எல்லா தயிரையும் வெறும் இருபது ரூபாய்க்கு கொடுத்து விட்டு செல்ல ஆரம்பித்தார் அவர்.

அதிகப்படியான தயிரை இந்த அம்மாள் கடைந்து மோர் செய்து விற்க ஆரம்பித்தார். சகலருக்கும் நன்மை தரும் மோர்! அதில் கொஞ்சம் கொஞ்சமாக வருமானம் வர ஆரம்பித்தது. மோர் வியாபரத்தை வைத்து, வெண்ணெய் வாங்கி, உருக்கி, நெய் வியாபாரம் துவங்க, அதுவே குடும்ப நிலையை உயர்த்தி விட்டது. ஆனால் அந்த அம்மா, மஹாமந்திரம் சொல்வதையும் குருவிடம் பிரார்த்தனையையும் விடவே இல்லை.

பிள்ளைகள் பசி என அழுவது நின்று விட்டது. கோபாலனின் அருளால் எப்பொழுதும் வீட்டில் வெண்ணை இருக்கிறது. மஹாமந்திரத்தை குருவிடம் நம்பிக்கை என்ற வெள்ளை மனத்துடன் சொல்லவே, அந்த அம்மாளின் வீட்டிற்கு தனக்கு பிடித்த தயிர் மூலமாகவே வளத்தை கொடுத்து விட்டான் பகவான். அது மூலம் என்ன தெரிவிக்கிறான் அவன்? என் குடும்பம் என்கிறானோ?

பகவான் தாயுமானவன் அன்றோ!



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி:** நாமம் சொல்பவர்களிடத்தில் வித்யாசம் உண்டா? எல்லோரும் ஒன்றா?

**பதில்:** நாமம் சொல்பவர்களை மூவகைப்படுத்தலாம்.

முதல் வகையினர், தங்கள் வாழ்க்கையில் வந்திருக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண விழைபவர்கள். இவர்கள் வியாதி வந்த பிறகு, அது குணமாக மருந்து சாப்பிடுவது போன்றவர்கள்.

இரண்டாவது வகையினர், தங்களுக்கு வரப்போகும் பிரச்சனைகளிலிருந்து தங்களை காப்பாற்றி கொள்வதற்காக நாமம் சொல்பவர்கள். இவர்கள் வியாதி வராமல் இருக்க தடுப்பூசி போட்டுக்கொள்பவர்களை போன்றவர்கள்.

மூன்றாவது வகையினர், நாமம் சொல்வது பிடித்திருக்கிறது என்பதால் நாமருசியினால் நாமம் சொல்பவர்கள். இவர்கள் பிடித்திருப்பதால், பூஸ்ட், ஹார்லிக்ஸ் போன்றவற்றை சாப்பிடுவோரை போன்றவர்கள்.

நாமா இந்த மூன்று வகையினருக்குமே அவசியம் என்றாலும் நாமம் சொல்பவர்கள், மூன்றாம் வகையினரை போல முன்னேறுவதற்கு முயற்சி செய்து வர வேண்டும்.

ஏனென்றால், பிறர் உத்சாஹப்படுத்த வேண்டிய அவசியமோ, வரக்கூடிய ஜன்மாக்களை பற்றிய பயமோ இன்றி, பகவான் மீதுள்ள அன்பினால், நாமா சொல்லி வர வேண்டும்.

**கேள்வி:** தாங்கள், நாளை மூப்பு வந்து விடும்; வியாதி வந்து விடும்; மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்; துக்கம் வந்து விடும்; நாமம் சொல்லுவோம் என்கின்றீர்கள். எப்பொழுதும் துன்பத்தையே கற்பனை செய்வது என்ன நியாயம்?

பதில்: நீங்கள் எப்பொழுதும் கார் வாங்க வேண்டும்; பெரிய வீடு கட்ட வேண்டும்; Bank Balance Increase செய்ய வேண்டும். Foreign போக வேண்டும் என்று சுகத்தையே கற்பனை செய்து கொண்டிருப்பது மட்டும் என்ன நியாயம்?

நீங்கள் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு தீர்மானித்து விட்டதால் நீங்கள் இப்படியாக கற்பனை செய்து வாழ்கின்றீர்கள்.

நாங்களோ பல பிறவிகள் எடுத்தது போதும்; முக்திதான் வேண்டும் என்பதால் மேற்படி சிந்தனை செய்கின்றோம்.

அவரவர்கள் லட்சியம் என்ன என்று தீர்மானித்து, கொண்டு, அதற்கு தகுந்தாற்போல், சிந்தனை செய்வதுதானே சரி.

உலகம் மித்யையோ, அநித்யமோ எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். உலகம் சாரமில்லாதது என்பது நிச்சயம்.



# கெங்குவார்பட்டி கோபி

-நல்ல ஹரி

பல வருடங்களுக்கு முன்பு, ஸ்ரீஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் பாகவத பவனத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது தலை நிறைய முடியுடன், ஒரு இளைஞர் ஸ்வாமிஜியை பார்த்தபடியே சற்று தொலைவில் நின்று கொண்டு அழுது கொண்டிருந்தார். ஸ்வாமிஜி அவருடைய பக்தியை கண்டு அருகில் அழைத்து பேசினார். அவர் பெயர் கோபி. ஊர் வத்தலகுண்டுவை அடுத்துள்ள கெங்குவார்பட்டி. Agriculture துறையில் நிறைய படித்துள்ளார். அன்று முதல், ஸ்வாமிஜியிடம் மனதை பறி கொடுத்து விட்டார். அவர் சொந்த ஊரில் ஸ்வாமிஜியை அழைத்து பிரவசனம் வைப்பார். தன்னிடம் உள்ள சொந்த பணத்தைத்தான் அதற்கு செலவழிப்பார். அவர்கள் ஊரில் உள்ள பெருமாள், அத்திமரத்தால் ஆனவர். அந்த கோவிலுக்கு திருப்பணி செய்து, ஸ்வாமிஜியை வரவழைத்து புனித நீராட்டு விழா செய்தார். இவருடைய ஒன்று விட்ட சகோதரர் வினோத். அவரும் கோபியும் ஓடி ஓடி கைங்கர்யம் செய்வார்கள். கோபியின் அம்மா ஒவ்வொரு ரூபாயாக சேர்த்து வைத்து, ஸ்ரீஸ்வாமிஜியை பார்க்கும்பொழுது வேதபாடசாலைக்கு என்று, கொடுப்பார்கள்.

அவர் தாயார் உடல்நிலை சரியில்லாமல் மதுரை மருத்துவமனையில் அனுமதித்து இருந்தபொழுது, ஸ்வாமிஜி சென்று பார்த்து விட்டு வந்தார். அவர் தாயாரும் பகவான் திருவடியை அடைந்தார்கள். கோபி அவர்களுக்கு, வெளிநாடுகளில் வேலை பார்ப்பதற்கு, வாய்ப்புகள் பல தேடி வந்தன. ஸ்ரீஸ்வாமிஜியை விட்டு போகமாட்டேன் என்று எந்த வெளிநாட்டு வாய்ப்புகளையும் அவர் ஏற்று கொள்ளவில்லை. அவர், அரசாங்க வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். அது தாமதமாகிக் கொண்டிருந்தது. எல்லோரும் ஏதாவது சிபாரிசு அல்லது மற்ற வழிகளில்தான் அந்த வேலை கிடைக்கும் என்று அதன்படி முயல கோபியை வற்புறுத்தினார்கள். கோபியோ, ‘நான் வேறு எந்த விதத்திலும் முயற்சிக்க மாட்டேன். ஸ்வாமிஜியின் அருள் எனக்கு அந்த வேலையை வாங்கி தரும்’ என்று திடமாக இருந்தார். சிறிது

காலம் Hyderabadஇல் வேலை பார்த்து வந்த அவருக்கு அவர் எதிர்பார்த்தபடி Agriculture Deptஇல் உத்யோகமும் பல சோதனைகளுக்கு பிறகு, கிடைத்தது. ராணிப்பேட்டையை அடுத்துள்ள விரிஞ்சிபுரத்தில் POSTING. ஸ்ரீஸ்வாமிஜி சென்ற மாதத்தில் அங்கு சென்றிருந்தார். அந்த ஊரில் பள்ளியில் படிக்கும் நிறைய குழந்தைகளுக்கு, கதைகள் சொல்லி நல்ல பழக்க வழக்கங்களை கற்று கொடுத்து, அவர்கள் கழுத்தில் துளசி மாலை, கோபி சந்தனம் என்று எல்லோரையும் அழகான பாதையில் அழைத்து செல்கின்றார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் செய்யும் நாமகீர்த்தனத்தை கேட்டு ஆனந்தம் அடைந்தார்.

கோபி பாகவதர் அவர்களால், விரிஞ்சிபுரம் பள்ளி மாணவர்களிடையே பக்தி பயிர் நன்றாக வளர்ந்துள்ளது.

---

## சேங்கனூரில் குருபூர்ணிமா

சேங்கனூர் ப்ரேமிக ஜன்ம ஸ்தானில் இவ்வாண்டு குரு பூர்ணிமா மகோத்சவம் ஜூலை 19 அன்று, மிக நேர்த்தியாக கொண்டாடப்பட்டது. நூற்றுக்கணக்கான பக்தர்கள், காலை நமது சத்குருநாதர் ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்களின் ஸ்ரீபாதுகை தாங்கிய புஷ்ப பல்லக்கின் புறப்பாட்டில் கலந்து கொண்டனர். அதை தொடர்ந்து ஸ்ரீபாதுகைக்கு, விசேஷ திருமஞ்சனமும் பூஜையும் நடைபெற்றது. தான் உகந்த திருமேனியாம் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா மன்னி அர்ச்சைகளுக்கு, புது வஸ்திரம் சாற்றி விசேஷ பூஜையும் நடைபெற்றது. அன்று இரவு பிரேமிக சம்பிரதாய பஜனையும், திவ்ய நாம கீர்த்தனமும் பிரேமிக ஜன்மஸ்தானில் இனிதே நடைபெற்றது.


“மதுரமுரளி” ஆண்டு சந்தா ரூ 180. **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.

- சந்தா அனுப்ப முகவரி: Guruji Sri Muralidhara Swamigal Mission, Plot No.11, Door No. 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83. மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- சந்தாதாரர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

# கச்சியில் ஆனி கருடன் சேவை

-ராமானுஜம்ஜி

'மின்னார் தட மதில்சூழ் வில்லிபுத்தூர்' என்று புகழப் பெறும் ஸ்ரீ வில்லிபுத்தூர் திவ்ய தேசத்தில், பெருமாளுக்கே திருப்பல்லாண்டு அருளிய ஸ்ரீவிஷ்ணு சித்தராகிய பெரியாழ்வார் ஆனி மாதம் சுவாதி நக்ஷத்திரத்தில் அவதரித்தார். மதுரையை ஆண்ட வல்லபதேவன் எனும் பாண்டிய மன்னன் பரத்வ நிர்ணயம் செய்வோருக்கு, பொற்கிழி அளிப்பதாக முரசு அறிவித்தான். பெருமாளும் பெரியாழ்வார் கனவில் தோன்றி பரத்வ நிர்ணயம் செய்து, பொற்கிழி பெற்று வருமாறு பணித்தார். பெரியாழ்வாரும் பொற்கிழி வென்று மன்னன் வேண்டுகோளுக்கு இணங்க, யானையின் மேலமர்ந்து மதுரையில் வீதியுலா வந்தார்.

ஸ்ரீஸ்வாமிஜி இதனைப் பற்றி கூறும் பொழுது, ஒரு ரசமான விஷயத்தை பகிர்ந்து கொண்டார். அதாவது பக்தர்களுக்குத்தான் பகவான் கருடன், யானை போன்ற வாகனங்களில் எழுந்தருளும்போது தரிசிப்பதற்கு ஆசை இருக்கும் என்பதல்ல; பகவானுக்கும் தனது பக்தரான பெரியாழ்வார் பொற்கிழி பெற்று, யானையில் வலம் வரும் காட்சியினை காணும் கொள்ளை ஆசையால் கருட வாகனத்தில் விரைந்து வந்து கண்டு பேரானந்தம் அடைந்தார்.

கருடாரூடனாக காட்சியளித்த பகவானை தரிசித்த பெரியாழ்வார், பொங்கும் பரிவுடன் பெருமாளுக்கு திருப்பல்லாண்டு பாடினார். இந்த திவ்ய வைபவத்தை கொண்டாடும் வகையில் 'முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதனில்' (காஞ்சிபுரத்தில்), கடந்த ஆனி மாதம் ஸ்வாதி நக்ஷத்திரத்தில், ஸ்ரீஸ்வாமிஜியுடன் சேர்ந்து இவ்வைபவத்தை காணும் பெரும்பேறு பெற்றோம்.

நமது குருநாதர் காஞ்சியில் உள்ள கீர்த்தனாவளி மண்டபத்திற்கு ஜூலை 13 மதியமே வந்தடைந்தார். அன்று ஸ்வாதி நக்ஷத்ரம். பெரியாழ்வார் நக்ஷத்ரம்; கருடாழ்வார் நக்ஷத்ரம்; நமது குருநாதரின் ஜன்ம நக்ஷத்திரமும் கூட! அந்த பொன்னாளில் யத்ருச்சையாக, இந்த மூவரின் தரிசனமும் ஒன்றாகக் கிட்டியது எங்கள் பாக்கியமே!

நமது சத்குருநாதர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் 108 திவ்யதேசங்களின் கீர்த்தனைகளான கீர்த்தனாவளியை (108 பாடல்கள்) கொண்டாடும் வகையில், காஞ்சியில் "கீர்த்தனாவளி மண்டபம்" என்னும் அழகிய ஸ்தலத்தை நிறுவி, அதில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் அனைத்து கீர்த்தனாவளி பாடல்களையும் கல்வெட்டுகளில் செவ்வனே பதித்து, அங்கு மனதை பறிகொள்ளும் ஒரு அழகிய ராதா கிருஷ்ண யுகளமும் அருள்பாலிக்கும்படி செய்ததை, ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் 21.1.2015 அன்று தனது திருக்கரங்களினால் தொடங்கி வைத்தார்கள். அங்கு வந்ததுமே, நமது ஸத்குருநாதருக்கு வரதனை பார்க்க ஆவல் மேலிட்டது. ஒரு குழந்தை வெகுநாட்களுக்கு பிறகு தனது ஊருக்கு வந்ததும், 'அப்பாவை' எப்போது பார்ப்போம் என்ற ஆவலில் இருப்பவரை எல்லாம் "அப்பா எப்போ வருவார்" என்று கேட்பது போல், நம் ஸ்வாமிஜி வரதர் எப்போது வருவார் என்று யாரைப் பார்த்தாலும், பரபரப்புடனும் தவிதவிப்புடனும், கேட்டுக் கொண்டு இருந்தார்!

'5மணி' என்று கேள்விப்பட்டு, நமது சத்குருநாதர் எல்லா பூஜை சாமான்களுடன் வாசலுக்கே வந்து விட்டார். கோயிலில் கூட்டம் அதிகமாக இருக்கவே எங்களை முன்னம் கோவிலின் துவாரத்திற்கு அனுப்பி, சத்சங்க குழந்தைகளை, கம்பீர நடை போட்டு, சிங்கார கொடை கொண்டு, ஜொலிக்கும் உடை தரித்து, பெருமாள் வரும் பாங்கை கண்டு ரசிக்குமாறு அருளினார். நாங்களும் குழந்தைகளை அழைத்து கொண்டு, கோயில் ராஜகோபுரத்திற்கு அருகாமையில் கருட சேவை சாதித்து வரும் பேரருளாள பெருமானுக்காக காத்திருந்தோம்.

பெருமாளை பார்க்க நம் ஸத்குருநாதருக்குத்தான் எத்தனை தவிப்பு. கொஞ்சம் கொஞ்சமாக நடந்து நடந்து, நாங்கள் இருக்கும் இடத்திற்கே வந்து விட்டார். கூட்டத்தின் நடுவே செல்ல தயக்கம் ஒரு பக்கம்! வரத பெருமாளை கருடாழ்வார் மேல் பார்க்க மேலிடும் தவிப்பு ஒரு பக்கம்; கோயில் த்வாரத்தையே கண் கொட்டாமல் பார்த்து கொண்டு கோபுரம் அருகில் வருவதும், நேரம் ஆகும் என்றவுடன் கூட்டத்தை தவிர்த்து, கீர்த்தனாவளி மண்டபம் திரும்புவதுமாக இருந்தார். வேட்டு சத்தம் கேட்டதும், சத்குருநாதரின் கவனம்

முழுவதுமாக கோயிலை நோக்கியே இருந்தது.

மாலை 7மணி ஆகி விட்டது.

உத்தரவேதிக்குள்ளே (யாக அக்னியிலிருந்து) ஸ்வயம் ஆவிர்ப்பவித்த பெருமாள்! வேத ஸ்வரூபமான கருடாழ்வாரின் மேல் ஒய்யாரமாய் பவனி வரும் பெருமாள்! புன்னகை ததும்பும் முகக் கமலத்திலிருந்து அருளை வாரி வழங்கும் பேரருளாளப்பெருமாள்! அழகிய வண்ணங்களாலான மாலைகளை தரித்து, அபயம் அளிக்கும் கரகமலம் காட்டி, சங்கு சக்கரம் தரித்து, பாங்கான 'தொப்பாரம்' எனும் கிரீடம் தரித்து சேவார்த்திகளின் 'கோவிந்த' நாம கோஷத்துடன் முன்பு ஆழ்வார்களின் ஸ்ரீசுக்திகளை பல ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்லி கொண்டு வர, மற்றொரு பக்கம் வேத கோஷமும் சொல்லிக் கொண்டு வர, பெருமாளும் ஆடி ஆடி அசைந்து அசைந்து, அவ்வப்பொழுது ஆனந்தம் மேலிட, குலுங்கி குலுங்கி நமது ஸ்ரீஸ்வாமிஜியை நோக்கி வந்தார். ராஜகோபுர வாசலில், அரை நிமிடம் நின்று கொடையால் மறைக்கப்பட்டு, தொட்டாச்சார்யார் தரிசனத்திற்கு பின், தன் உலாவை தொடர்ந்தார்.

பழம், பூ, மாலை, உபசாரங்களோடு நின்ற ஸ்ரீஸ்வாமிஜி அருகில் வந்ததும், அர்ச்சக முகேன பெருமாள் ஸ்ரீஸ்வாமிஜியை அருகில் அழைக்க, சடாரி, மாலை, பிரசாதங்கள் அருளி ஸ்ரீஸ்வாமிஜியை பறந்து செல்லும் அவசரத்திலும் அன்பாய் கடாக்ஷித்து கொண்டே நகர்ந்தார். ஸ்ரீஸ்வாமிஜியை அணைத்தபடியே கருட வாகனனான அருளாள பெருமாள் 100மீட்டர் பறந்து விட்டார்!

ஸ்ரீஸ்வாமிஜியும் அந்த மக்கள் வெள்ளத்திலும் பேரருளாள பெருமாளை பார்த்தபடியே, ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, "அப்பா! இப்படியே என்னை கருடாழ்வாரோடு வைகுண்டம் வரை கொண்டு செல்ல மாட்டாயா?" என்று பக்தியால் உருகி பிரார்த்தித்து கொண்டார்.

திவ்யமான ஒரு திருமாலை, பழம், பிரசாதத்துடன் பெருமாளும் ஸ்ரீஸ்வாமிஜியை பிரியாவிடை கொடுத்து, திரும்ப அனுப்பினார். மேற்கொண்டு விரைந்து சென்ற பெருமாளின் பின்னழகை கண்கொட்டாமல் பார்த்தபடி, ஸ்ரீஸ்வாமிஜி கீர்த்தனாவளி மண்டப வாசலுக்கு திரும்பினார்.

ஸ்ரீஸ்வாமிஜி, காஞ்சி வரதனை பின் தொடர்ந்த வேத

பாராயணம் செய்து கொண்டு வந்த ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியையும் வந்தனம் செய்து விட்டு, டோலோத்ஸவம் செய்ய கீர்த்தனாவளி மண்டபத்திற்கு உள்ளே சென்றார். அப்பொழுது எங்களிடம், 'நாலாயிர திவ்யபிரபந்த அத்யயன உத்ஸவம் பல கோவில்களில் நடந்தாலும், வேத அத்யயன உற்சவம் நம் கச்சி வரதனுக்கு மட்டுமே தவறாது நடந்து வருகிறது' என்று சொல்லி, 'வரதா வரதா' என்று மெல்லிய குரலில் நாதழுதழுக்க சொல்லிக்கொண்டே, ராதாகிருஷ்ண சன்னதியை அடைந்தார்.

(அன்றிரவு கருட சேவைக்கோலம் கலைந்து ஒரு தாழம்பு கை கொண்டு, ஒய்யாரமான ஒரு புறப்பாடு, கோயில் உட்பிரகாரத்தில் நடந்தது. அந்த ஆச்சர்ய அனுபவம் ... தொட்டாச்சாரியாருக்கு தரிசனம் தரும் ரசமான பகவானின் லீலையும் அடுத்த இதழில்)

(வரதர் வருவார் ...)


Pranams at the Holy feet of
Sri Sri Swamiji

உங்களின் அனைத்து விதமான
போட்டோகிராபி மற்றும்
வீடியோ தேவைகளுக்கு அணுகவும்




ராஜா - 9840572481

# ப்ரேமிக ஜகன்னாத ரத யாத்ரை

பகவானின் அவதாரங்கள் அனந்தமானவை. அவற்றுள் முக்கியமாக தசாவதாரம் என்று நாம் மத்ஸ்ய, கூர்மாதி அவதாரங்களை கொண்டாடுகிறோம். அந்த பத்து அவதாரங்களிலும் மத்ஸ்ய, கூர்ம போன்ற அவதாரங்களுக்கு பக்தர்கள் அவ்வளவாக காணக் கிடைக்கவில்லை. ராம கிருஷ்ணாதி அவதாரங்களுக்கே பெரும்பாலும் பக்தர்கள் இருக்கின்றனர். அதிலும் ஸ்ரீராமாவதாரம் ஒரு கம்பீரமான அவதாரமாகவும், ஸ்ரீகிருஷ்ணாவதாரம் பல லீலைகள் புரியும் சௌலப்யமான அவதாரமாகவும் திகழ்கின்றனர்.

அதேபோல் கோயில்களில் அருள்பாலிக்கும் பெரும்பாலான அர்ச்சாவதாரங்கள், ஓரிரு மகரிஷிகளுக்கும், சில ஆச்சார்ய புருஷர்களுக்கும் மட்டுமே, ப்ரத்யக்ஷமாகும் கம்பீர அர்ச்சாவதாரங்களாக இருக்கின்றனர். பெருமாள் பெரும்பாலான அர்ச்சாவதாரங்களில் பக்தர்களுடன் கலந்து பழகி, லீலைகளை எல்லாம் செய்வதில்லை. அர்ச்சைகளிலும் பண்டரி, பத்ராசலம், பூரி ஜகன்நாதம், குருவாயூர் போன்ற இடங்களில்தான் பெருமாள் இன்றுவரை பக்தர்களுடன் கலந்து பழகி, பல அழகிய லீலைகள் செய்வதை, பக்த விஜய சரிதங்களில் கேட்கிறோம். பகவான் தன் பக்தர்களை பரிபாலிக்கும் விதம், லாலனை செய்யும் பாங்கு, கொஞ்சும் அழகு, எல்லாம் ஆனந்தமான சரித்திரங்களன்றோ! அதிலும் பூரி ஜகன்னாத க்ஷேத்ரத்தை அறியாதவர்களே இருக்க முடியாது. அங்கு லீலா வினோத ஜகன்னாதர் பல பக்தர்களின் வீட்டில், குடும்பத்தின் ஒரு அங்கமாகவே வாழ்ந்து, அவர்களுடன் பல லீலைகளை செய்திருக்கிறான்!

பூரி ஜகந்நாத க்ஷேத்ரத்தில், கர்மா பாய் என்ற ஒரு பெண்மணி இருந்தாள்! சிறு வயதிலிருந்தே, ஸ்ரீ ஹரியின் திருவடியை அண்டி பக்திமானாய் திகழ்ந்தாள். சிறு வயதிலேயே மணமாகி, தனது கணவரையும் இழந்தாள். தனது மகன், தந்தை முகம் கூட பாராத அவல நிலை கண்டு, தானும் வருந்தினாள். மகன் நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமென வளர்ந்தான்; அவனுக்கு திருமணமாகி, ஒரு குழந்தையும் பிறந்தது! பாட்டிக்கு சந்தோஷம்; ஆனால், அது ஒரு சில நாட்களிலேயே துக்கமாய் மாறியது. கர்மா பாய், தனது ஒரே மகனையும் காலனிடம் பறி கொடுத்தாள். அழுதாள். பரிதவித்தாள். தனது பேரனின் பால் வடியும் முகத்தில், ஆறுதல் பெற்றாள். ஏனோ தெரியவில்லை,

அந்த ஆறுதலும், ஆறாண்டுகளுக்கே நிலைத்தது. தன் மகன் சென்ற இடத்தைத் தேடி, பேரனும் போயே விட்டான்! கர்மாபாய் என்னதான் செய்வாள்? புரண்டு அழுதாள்; செய்வதறியாது ஸ்ரீஹரியை, சரண் அடைந்தாள்.

ஹரிக்ருபையும், சத்சங்க சாதுக்கள் கிருபையும் வேறா என்ன? அதி விரைவில், ஸ்ரீஹரி, சாதுக்கள் ரூபத்தில் வந்தான். சாதுக்கள் பாட்டியின் அவல நிலை கண்டும் கேட்டும், கருணையால் மனம் நெகிழ்ந்து, அழகிய இனிமையான வார்த்தைகள் சொல்லி தேற்றினர். 'அநித்யமான இந்த உலகில், இன்பம் இல்லை. ஜகன்னாதனின் சரணங்களில்தான் உண்மை அன்பு இருக்கிறது' என்று கூறி, கர்மா பாயிக்கு ஒரு அழகிய ஜகன்னாத கோபாலனை தந்தருளினர். 'உன் மகனுக்கும், பேரனுக்கும் என்ன அன்பு தந்தாயோ, அதை கோபாலன் பால் வை!' என்ற பக்தி ரகசியத்தை அருளிச் சென்று விட்டனர். சாதுக்கள் கிருபையால், கோபாலன் உண்மையில் கர்மா பாயின் குழந்தையாகவே ஆனான். அவள், அமுது படைத்ததை உகந்து உண்டான். அவளோடு, ஆனந்தமாய் விளையாடினான். அப்பழுக்கற்ற அன்பில், ஆசாரமும் அவிழ்ந்து போகுமன்றோ? குழந்தை கண்ணன், பசி என்றால், உடனே பால் காய்ச்சி கொடுப்பாள். இவ்வாறு நாட்கள், நொடிகளாய் நகர்ந்தன! ஒரு ஆசாரமுள்ள அந்தணர், அவள் அகத்திற்கு வந்தார். இப்படி குளிக்காமல், கர்மா பாய் செய்யும் பூஜை மட்டுமே அவர் கண்களுக்கு தெரிந்தது. அவளன்பு அவருக்கு புலப்படவில்லை. தலத்தையும் உடலையும் பாவனமாக்கியே, பூஜை செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார் அவ்வந்தணர். கர்மா பாயும், கர்ம ச்ரத்தையாக, காலையில் எழுந்து வீட்டை மெழுகி, சாணம் இட்டு, தானும் நீராடி, மெதுவாக தளிகையை ஆரம்பித்தாள்.

ஒரு பாலன் பசிதாங்குவானோ? நமது கண்ணன், நேரே ஜகன்னாத கோவிலில் பூஜை செய்யும் ஒரு 'பண்டா' கனவில் முறையிட்டான்! அவர் அதிகாலை ஓடோடி வந்து அனைவரிடமும், 'கர்மாபாயிடம் அன்பு பூரணமாய் இருப்பின், ஆசாரம் அனாவசியம்; அன்பு பூரணமாகவே ஆசாரம்' என்று சொல்ல, படுக்கையிலிருந்து அப்போதே எழுந்த கர்மாபாயும், சிறு அவல் எடுத்து கோபாலுக்கு கொடுக்க, அங்கிருந்த மெய்யன்பர்கள், கோபாலன் அதை ஏற்றுக்கொள்வதை கண்கூடாக கண்டு, ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

இவ்வாறு இன்று வரை பூரி ஜகந்நாதன் லீலா புருஷனாக இருந்து கொண்டு, பக்தர்களுடன் விளையாடி வந்து பேரானந்தம் அளிக்கிறான்' என்று நமது சத்குருநாதர் கூறி முடித்தார். இதை கேட்ட அடுத்த தினமே, நமது தக்ஷிண ஜகன்னாத பூரியான கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் விமரிசையாக, ஜகன்னாதத்தில் எப்படி, என்று, எவ்வாறு ரதயாத்திரை நடக்குமோ, அவ்வாறே, அப்பொழுதே இங்கு நடக்கவிருப்பதை நினைவு கூர்ந்து, பரவசமாய் விடியலை எதிர்பார்த்திருந்தோம். அதுவும் நமது குருநாதரும், பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ அண்ணாவும் சேர்ந்து, இந்த யாத்திரையில் பங்கு கொள்ளும் அன்பர்களுக்கு அருள் பாலிக்க போகிறார்கள் என்றவுடன், நாங்கள் அந்த எதிர்பார்ப்பில் நம் வசமிழந்தோம்.

வந்தது அந்த திருநாள்! ஆஷாட சுக்ல திவிதியை! ஜூலை 6ம் தேதி. சென்ற வருடம் ரத யாத்திரையின் ஆனந்த திளைப்பில் இருந்த எங்களுக்கு, அதை மீறி வருவதற்கு முன்னமே, அடுத்த ரத யாத்திரையில் பங்கு கொள்ளும் பாக்யமா? குரு கிருபையை என்னவென்று சொல்வது!

ஸ்ரீ ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் சரணம் தொட்டு, அருணோதயம் ஆனது! அதிகாலையிலேயே ரதோத்ஸவம் கண்டருள வேண்டி, நம் பலபத்ர ஸுபத்ரா ஸமேத ஸ்ரீ ப்ரேமிக ஜகன்னாதர் தேரில் வந்து, கோயில் கொண்டார். மன்னார்குடி ஸ்ரீபிரசன்னா தீக்ஷிதருடன், நமது நாங்கூர் பாடசாலையில் பயின்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் சேர்ந்து, மிகவும் நேர்த்தியாக ரதத்தையும், ஸ்வாமியையும் அலங்காரம் செய்தனர்; செண்பகம், முல்லை, மல்லி, வெண்தாமரை, துளசி, பன்னீர் ரோஜா, தவனம், மரிக்கொழுந்து, சம்பங்கி, மகிழம் பூ என்று கண்களை கொள்ளை கொண்டான் நம் கண்ணன்!

ரதமும் அழகாக சிவப்பும் மஞ்சளும், நீலமும் சேர்த்து மிகவும் மங்களமாய் காட்சி அளித்தது. அழகிய சிவப்பு கொடியுடன், ஸ்ரீ ஸ்ரீ அண்ணா வருகைக்கு, ஸ்ரீ ரதம் காத்து கொண்டிருந்தது. மிருதங்கம், டோல்கி, கோல், வீணை, ஜால்ரா, பெரிய ஜால்ரா, கொட்டு மேளம், பேரி, சங்கம் என்று பாகவதர்கள் மஹாமந்திர கீர்த்தனம் செய்து கொண்டிருக்கும் போது, ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவும் காலை சுமார் 7:30 மணி அளவில் அழகிய புன்முறுவல் தன் தாமரை வதனத்தில் தவழ, வந்தருளினார். உடனே மங்கள வாத்தியங்கள் முழங்க, ப்ரேமிக ஜகன்னாத ஸ்வாமிக்கு திரை விலக்கி, மங்கள ஹாரத்தி

ஆயிற்று!! "ஹரி!ஹரி" "ஸத்குரு மஹராஜ் கீ ஜய்" "ஜகன்னாத ஸ்வாமிக்கு ஜய்" என்ற ஜய கோஷங்கள், மங்கள வாத்ய கோஷத்தை மீறி விண்ணை பிளந்தன! ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவும் தன் திருக்கரங்களினால் ரதத்தை முதலில் இழுத்து அருளினார்கள்!

நம்முடைய நாமத்வாரை சேர்ந்த பக்தர்கள், பல ஊர்களிலிருந்தும், ஆயிரக்கணக்கில் கூடி விட்டார்கள். கோவிந்தபுரத்தில் எங்கு திரும்பினாலும் பக்தர்கள் கூட்டம். பக்தர்கள் பல ஊர்களிலிருந்தும், ஏன் வெளிநாடுகளிலிருந்தும் ரதோத்சவத்திற்காக ஆவலுடன் கூடினர்! அப்போது பலம் பெற்ற மகாமந்திர கீர்த்தனையானது, கலிக்கு கிலி கொடுத்து, பக்தர்களின் செவிகள் குளிர, ஸ்ரீ ஸ்ரீ அண்ணா மற்றும் நமது குருநாதர் அவர்களின் முகம் மலர, ஜகன்னாதரும் ஆடி ஆடி அனுபவிக்க, மூன்று மணிநேரம் தொய்வில்லாமல் கர்ஜனையாய் வளர்ந்தது. ரதம் சைதன்ய குடீரத்திலிருந்து புறப்பட்டு, கோவிந்தபுரத்தின் நான்கு திருவீதிகளில் வலம் வந்தது. திவ்ய நடனமும் ஆனந்த கீர்த்தனமும், ரதமும் திவ்யதேசமாம் பாற்கடலில் பரவும் அலையை போல் வலம் வந்தது! ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவும், நமது குருநாதரும் ஆனந்தமாய் கரங்களை தூக்கி, நாமத்தை சொல்லிக் கொண்டும் வந்தனர். அப்பொழுது ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவை சைதன்யராகவே எல்லோரும் கண்டு, பரவசம் அடைந்தார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் உலகம் மறந்து, நாம அம்ருதத்தில் மூழ்கி பரவசமாய் ஆனந்தித்து கொண்டு மூன்று மணி நேரம், மூன்று வினாடி போல் பறந்ததை கண்டு வியந்தனர்.

ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள், ஸ்ரீரதம் சைதன்ய குடீரத்தை அடைந்ததும், நமது மூலவரான ப்ரேமிக ஜகன்னாதரை ஆராதித்து, உபன்யாஸம் அருளினார்கள். நாம மஹிமையையும், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் திவ்ய லீலைகளையும் எல்லோர் மனமும் உருகும்படி, உபன்யாசித்து அருளினார்கள். கோவிந்தபுரமே அன்று ஜகன்னாத புரியாயிற்று. பக்தர்களும் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய - நித்யானந்தர் காலத்தில் எப்படி ரத யாத்ரை நடந்திருக்கும் என்பதை, பிரத்யக்ஷமாய் கண்டு களித்தனர். பிறகு என்ன, ஸ்மரண சுகத்தில் இருக்கும் நமக்கு, இதோ அடுத்த வருடத்திலேயே அடுத்த ரத யாத்திரை வரத்தானே போகிறது!!

# அகில பாரத சாமவேத சம்மேளனம்

- ஶ்ரீபத்மபாதர்

'வேதானாம் ஸாம வேதோஸ்மி' என்கின்றான் பகவான் கீதையில். நாயன்மார்கள் பாடும்பொழுது, 'சந்திரன் சடையில் அணிந்த சங்கரன் சாமவேதி' என்கின்றார்கள். ஆழ்வார்களும், 'தூய்மை யோகம் ஆயினாய், துழாய் அலங்கல் மாலையாய், ஆமையாகி ஆழ் கடல் துயின்ற ஆதிதேவ நின் நாமதேயம் இன்னதென்ன வல்லமல்ல ஆகிலும், சாமவேத கீதனாய சக்ரபாணி அல்லையே' என்கின்றார்கள். மஹாரண்யம் ஶ்ரீ ஶ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கர்ய சபா சார்பில், ஸ்வாமிஜியின் ஆசையின் பேரில், பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் ஸ்வாமி சன்னதியில், 'அகிலபாரத வேத சம்மேளனம்', இந்த மாதம் **20**ம் தேதி முதல் **29**ஆம் தேதி வரை நடைபெற்றது.

இந்த சம்மேளனம், அம்பத்தூர் ப்ரும்மஶ்ரீ சந்திரமௌலி ஸ்ரௌதிகள் தலைமையில் நடைபெற்றது. இருபத்து எட்டு சாமவேத வித்வான்கள் கலந்து கொண்டார்கள். ஶ்ரீசந்திரமௌலி ஸ்ரௌதிகள் குடும்பமே வேத அத்யயனத்தில் பூரணமாக ஈடுபட்டு வருவதோடு மட்டுமல்லாமல், பாடசாலை அமைத்து நிறைய சாம வேத வித்யார்த்திகளுக்கு, பாடம் சொல்லியும் வருகின்றார்.

அவருடைய தன்னலமற்ற லோக உபகாரமான கைங்கர்யத்தை கௌரவித்து, அவருக்கு சாந்தீபனி குருகுலம் சார்பில் 'குலபதி' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அவருடைய குமாரர் சிரஞ்சீவி ஶ்ரீமத் ராம சுப்ரமண்ய சர்மா அவர்கள், பதினான்கு வயதிலேயே சாமவேத அத்யயனத்தை நியம அத்யயனமாக செய்து முடித்ததை கௌரவிக்கும் வகையில், அவருக்கு 'பால ஸ்ரௌதின:' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பாராயணம், தினமும் எட்டு மணி நேரத்திற்கு குறையாமல் நடந்தது. எல்லோருடைய குரலும் சேர்ந்து கேட்பதற்கு ஆனந்தமாக இருந்தது. அப்படி ஒரு பாராயணம் நடந்தது. ஶ்ரீசங்கர நாராயணன் அவர்கள், வித்வான்கள் மற்றும் வந்திருந்தவர்கள் உட்பட, எல்லோருடைய தங்கும் மற்றும் போஜன வசதிகளை கவனித்து கொண்டார். ஶ்ரீப்ரும்மானந்த சாஸ்திரிகள், சிரத்தையாக ஓடி ஓடி கைங்கரியம் செய்தார்.

பூர்த்தி அன்று கலந்து கொண்ட எல்லா வேத வித்வான்களுக்கும், வேத அத்யயனம் செய்தவர்களே, பாதம் அலம்பி, சந்தன குங்கும் இட்டனர். பிறகு அவர்களுக்கு மாலை மற்றும் தலைப்பாகை அணிவிக்கப்பட்து. த்ரிமதுரம், சந்தன, சர்க்கரை உபசாரம் செய்யப்பட்டு, கற்பூர ஆரத்தியும் காட்டப்பட்டது.

எல்லோருமே இந்த பாராயணத்தினால், ஆனந்தம் அடைந்தார்கள். இதன் நடுவே, ஸ்ரீஸ்வாமிஜி, பாஸ்கர் அவர்கள் இல்லத்தில் நடந்த ராதாகல்யாணத்தில் கலந்து கொண்டார்கள். 24ஆம் தேதி மாலை கர்நாடகா தலைமை நாமத்வாரில் ஸ்ரீகிருஷ்ண ஜனனம் பிரவசனமும் செய்தார்கள். 25ஆம் தேதி காலை கோகர்ணம் ப்ரும்மஸ்ரீ மஹாபலேஷ்வர் கனபாடிகள் (அத்யாபகர்) அவர்களை கொண்டு, பாரத்வாஜ வேதாரண்ய வேத வித்யாபீட பிரதிஷ்டான் டிரஸ்ட் (கோகர்ணா) சார்பில், யஜுர் வேத பாடசாலையை ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சன்னதியில் துவக்கி வைத்தார்கள்.

## சத்சங்க செய்திகள்

**திருவல்லிக்கேணி ஜுன் 28** ஸ்ரீபாண்டுரங்கன் கோயில் சம்ப்ரோக்ஷண மண்டலாபிஷேக பூர்த்தியில், ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டு, பாண்டுரங்கனுக்கு திருமஞ்சனமும் பூஜையும் செய்தார்கள்.

**ஜுலை 11,12** இரு நாட்களும் **கூடுவாஞ்சேரியில் அபயம் பிரார்த்தனை மையத்தை** திறந்து வைத்து, அங்கு உள்ள யோகிராம்சுரத்குமார் திருவுருவ விக்ரஹ ஆராதனையும் செய்தார்கள்.

**ஜுலை 15 ஆஷாட ஏகாதசி**யை முன்னிட்டு விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில் நடந்த நாமகீர்த்தனம், பூஜையில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டு அருளுரையும் வழங்கினார்கள்.

**ஜுலை 17 குரோம்பேட்டை** குமரன்குன்றம் எதிரில் உள்ள அனுமார் கோவிலில் நடைபெற்ற **சத்சங்கத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி நாம மஹிமை குறித்து, அருளுரை வழங்கினார்கள்.

ஸ்ரீஹரி:

ஸ்ரீபக்த கோலாஹலன் துணை

# சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் 83ஆவது ஜயந்தி நிகழ்ச்சி நிரல்

19.08.2016 காலை காயத்ரீ ஜபம், பிறகு சதுர்வேத பாராயணம், பிறகு இதிஹாச புராணங்களும் ப்ரேமிக கிரந்தங்களும் பாராயணம்

மதியம் பகவானுக்கு திருவாராதனம், பாகவதாள் சமாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் தலைமையிலும் முன்னிலையிலும்** நடைபெறும்

**ஸ்ரீகாந்தன்ஜி** ஸ்ரீஸ்ரீ அண்ணாவின் ஸ்ரீபாகவத தர்ம சாஸ்திரம்

**ஸ்ரீநீலபாலன்ஜி** ஸ்ரீஸ்ரீ அண்ணாவின் ப்ருந்தாவன மஹாத்மியம்

**ஸ்ரீஹரிஜி** வியாச விஜயம்

**ஸ்ரீரங்கன்ஜி** திவ்யதேச வைபவம்

இரவு திவ்யநாமம் மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள், டோலோத்ஸவம்

.............................................

20.08.2016 காலை ப்ரபோதனம்

மதியம் திருவாராதனம், ததீயாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள்**

**ஸ்ரீயக்ஞராமன்ஜி** ராமகதாம்ருதம்

**ஸ்ரீமுரளிஜி** கோவிந்தகதாம்ருதம்

**ஸ்ரீஹரிஜி** வியாச விஜயம்

**ஸ்ரீசந்த்ருஜி** பாரத கதாம்ருதம்

இரவு திவ்யநாமம் ஸ்ரீராமகிருஷ்ணபாகவதர், திருவிசலூர், டோலோத்ஸவம்

.............................................

21.08.2016 காலை ப்ரபோதனம்

மதியம் திருவாராதனம், ததீயாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள்**

**ஸ்ரீமதி ஜனனிஜி** ராகவ சதகம்

**ஸ்ரீசுபத்ராஜி** கோவிந்த சதகம்

இரவு **ஸ்ரீமதிவிசகாஹரிஜி** கதாம்ருத லஹரி

.............................................

**22.08.2016** காலை ப்ரபோதனம்
மதியம் திருவாராதனம், ததீயாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள்**

**ரவிராமன்** 'லகுஸ்தோத்ரமாலா' **மாதவன்** 'லகுஸ்தோத்ரமாலா'
**ஸ்ரீதரன்** 'லகுஸ்தோத்ரமாலா' **மாதவன்** 'லகுஸ்தோத்ரமாலா'

இரவு **பலராம பாகவதர்** திவ்யநாமம், டோலோத்ஸவம்

.................................................

**23.08.2016** காலை ப்ரபோதனம்
மதியம் திருவாராதனம், ததீயாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள்**

**கோவிந்தபுரம் விட்டல் ருக்மிணி சம்ஸ்தானம் சிஷ்யர்கள்**

இரவு **ஸ்ரீஜெயக்ருஷ்ண தீக்ஷிதர்** திவ்யநாமம், டோலோத்ஸவம்

.................................................

**24.08.2016** காலை ப்ரபோதனம்
மதியம் திருவாராதனம், ததீயாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள்**

**சாந்தீபனி குருகுலம் சிஷ்யர்கள் பிரவசனம்**

இரவு **ஸ்ரீசட்டநாதன், ஸ்ரீஸ்ரீகாந்தன், ஞானேஸ்வர்**
திவ்யநாமம்,டோலோத்ஸவம்

.................................................

**25.08.2016** காலை ப்ரபோதனம்
மதியம் திருவாராதனம், ததீயாராதனை

**மாலை 4 முதல் 6 வரை பிரவசனங்கள்**

**ஜன்மஸ்தான் பாடசாலை பையன்கள்** ப்ரவசனம் ப்ரகரண க்ரந்தங்கள்

இரவு **ஸ்ரீதுகாராம்கணபதி, ராஜகோபால், ரகுநாததாஸ்** அபங்க பஜனை, டோலோத்ஸவம்

.................................................

**26.08.2016** காலை **ஸ்ரீ ஸ்ரீ அண்ணா பாத பூஜை**
பாதுகை புறப்பாடு, ப்ரார்த்தனா கீதங்கள்,
மதியம் திருவாராதனம், ததீயாராதனை

சுபம்

.................................................

ஸ்ரீஹரி:

ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதன் துணை

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை - 83

# ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின்

இருபத்து மூன்றாவது வருட **ப்ரும்மோத்ஸவ பத்திரிக்கை**

26.08.2016 to 4.09.2016

| | | | |
|---|---|---|---|
| 26.08.16 | வெள்ளி | இரவு | நந்தோத்ஸவம்<br>ஹம்ஸ வாஹனம் |
| 27.08.16 | சனி | மாலை | சேஷ வாஹனம் |
| 28.08.16 | ஞாயிறு<br>ஏகாதசி | காலை<br>மாலை | விசேஷ திருமஞ்சனம்<br>கருட சேவை |
| 29.08.16 | திங்கள்<br>துவாதசி | காலை<br>மாலை | ஸ்ரீகோவிந்த பட்டாபிஷேகம்<br>கற்பக வ்ருக்ஷ வாஹனம்<br>யானை வாஹனம் |
| 30.08.16 | செவ்வாய் | மாலை | சிம்ம வாஹனம் |
| 31.08.16 | புதன் | மாலை | குதிரை வாஹனம் |
| 1.09.16 | வியாழன் | மாலை | நிகுஞ்சோத்ஸவம் |
| 2.09.16 | வெள்ளி | மாலை | ஜானவாசம் - நாதஸ்வரம்<br>கடலூர் ஸ்ரீபாலச்சந்திரன் &<br>ஸ்ரீபாலமுருகன் குழுவினர் |
| 3.09.16 | சனி | காலை<br>மாலை | ஸ்ரீராதா கல்யாணம்<br>தெப்போத்ஸவம் |
| 4.09.16 | ஞாயிறு | காலை | ரதோத்ஸவம், விடையாற்றி |

பாகவதோத்தமர்கள் அனைவரும் வந்திருந்து கதாசிரவணம், நாமசங்கீர்த்தனம் மற்றும் உத்ஸவ வைபவங்களில் கலந்து கொண்டு, ஸ்ரீபகவத் கிருபைக்கும் குருக்ருபைக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

-மஹாரண்யம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

## ரூப கோஸ்வாமி

4

– ஜனனி

ப்ரபு ரூபரிடம் - இதுநாள் வரை நீ, பணத்தையே சிறந்தது என்று எண்ணினாய். அதையடையவே நீ ஹுசைன் ஷாஹின் தர்பாரில் இருந்தாய். ...(சென்ற இதழ் தொடர்ச்சி) .... அவனோ ஒரு மூடன், நீயோ மஹா பண்டிதன். அவன் பொறுப்பற்றவனாக இருந்தான், நீயோ எப்பொழுதும் விழிப்புடன் இருந்தாய். அவன் அதர்மியாக இருந்தான், நீயோ தர்மாத்மாவாக இருந்தாய். உன்னைக் காட்டிலும் எல்லா விதத்திலும் அவன் கீழ்மையாக இருந்தான், நீயே ஸ்ரேஷ்டமாக இருந்தாய். ஆனால், அவனளவு செல்வந்தனாக நீயில்லை. எல்லா சுகங்களுக்கும் சாதனம் செல்வம் ஒன்று தான் என்ற எண்ணம் உன் மனதில் இருந்தது. அதனால்தான், உனது உயர் பிறப்பு, பாண்டித்யம், தர்மம் எல்லாவற்றையும் துச்சமாக எண்ணி, அந்த மூடனின் எதிரில் பயந்து நடுங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாய். ஆனால் இப்பொழுது பொன்னிலும் பொருளிலும் உண்மையான சுகம் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட நீ, ரத்தத்தையே வேர்வையாக சிந்தி சம்பாதித்த செல்வம் அனைத்தையும் மண்ணை போல் எண்ணி துறந்து, பக்தி மார்க்கத்திற்குள் ப்ரவேசித்திருக்கிறாய். என்ன? அப்படிதானே? என்றார்.

ரூபர், "ஆம் ப்ரபு! அவைகள் எனக்கு பாரமாக ஆகிவிட்டன. எப்படியோ அதிலிருந்து விடுபட்டு வந்துவிட்டேன். ப்ரபு ரூபரின் கையை தன் கைமேல் வைத்துக் கொண்டு கூறலானார், "நீயே யோசித்துப் பார்! பணத்திலா மேன்மையுள்ளது? ஹுசைன்ஷாவிடம் நீ பயந்து கொண்டிருந்தாய். காரணம், உனக்கு பணம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம்தான். பணம், சொத்து இவைகளின் துச்சத்தன்மையை உணர்ந்த பின், இப்போது ஒரு ஹுசைன்ஷா என்ன, ஆயிரம் ஹுசைன்ஷா வந்தாலும் நீ பயப்படமாட்டாய். ஏனென்றால், எக்காரணத்தினால் நீ பயம் கொண்டிருந்தாயோ, அந்த பயத்திற்கான காரணமே இப்பொழுது நஷ்டமாகிவிட்டது. எப்படி ஒரு விஷ செடியை வேரோடு பிடுங்கிய பின், அதன் பழங்களால் ஜனங்களுக்கு மரணம் ஏற்படுமோ என்ற பயமே இருப்பதில்லையோ, அதே போல் சொத்து-செல்வம் இவைகள்

தான் சிறந்தவை என்ற எண்ணம் மனதிலிருந்து நீங்கிய பின், ஒருவனுக்கு யார் முன்பும் தீனமாகவோ பயந்துகொண்டோ நிற்க வேண்டிய அவசியமே இல்லை. மனிதர்களின் உயர்ந்த குணங்களினால் அவர்களை மேலோராக எண்ணாமல், அவர்களிடம் உள்ள பணத்தினால் அவர்களை மேலோராக எண்ணுவது என்பது நமது ஹ்ருதயத்தின் அஸுர வ்ருத்தி என்பதை உணர வேண்டும். எவனுடைய த்ருஷ்டியில் மண்ணும் பொன்னும் ஒன்றேயாகுமோ, அவன் யார் எதிரிலும் பயப்படவே தேவையில்லை. அவனது த்ருஷ்டியில் ஏழை பணக்காரன், எல்லாம் ஒன்றே. தனத்தை அடைய வேண்டும் என்ற தீராத தாகமே, ஏழை-பணக்காரன் என்ற பேதங்களை தோற்றுவிக்கிறது.

ஹ்ருதயத்தில் யாரிடமும் எதுவுமே எதிர்பார்க்காத நிலை இருக்குமானால், பின் அவனுக்கு யார் ஏழை? யார் தனவான்?

(தொடரும்)


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# வீடு தேடி வருவான் விட்டலன் -30

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஶ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

### ஶ்ரீஞானேஸ்வரர்-19 சார்ங்க தேவர்

பூனாவிலிருந்து 25 கி.மீ. தொலைவில் ஆலந்தி என்ற ஊரில் ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வந்த ஞானேஸ்வரர் சிறியவராக இருந்தாலும் அவர் மஹிமை எங்கும் பரவி ஊர் முழுக்க எப்பொழுதும் அவரை பற்றியே பேச்சு. பொறாமை என்பது மனிதனின் இயல்பு ....சென்ற இதழ் தொடர்ச்சி...

ஞானேஸ்வரரின் புகழ் பரவ பரவ, அந்த ஊரில் வசித்து வந்த சார்ங்க தேவர் என்பவருக்கு பொறாமை அவர் மேல் பெருகிக் கொண்டே இருந்தது. ஞானேஸ்வரரை நேரில் சந்தித்து அவரை வாதில் வென்று அவரை அவமானப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டார் இந்த சார்ங்க தேவர்.

ஆனால் எந்த விதத்தில் ஞானேஸ்வரரிடம் சம்பந்தப்பட்டாலும், அது சம்பந்தப்பட்டவரை ஞானத்தில் கொண்டு தள்ளி விடுவதை பார்க்கலாம். அதுதான் சார்ங்க தேவருக்கும் நடந்தது. ‘சாரு அங்கம்’ என்றால் அழகிய அங்கம் என்று பொருள். அழகிய அங்கங்கள் கொண்டு, சுருள்முடிகள் நிறைந்த கேசத்துடன் மன்மதன் போன்ற அழகோடு ஜொலித்து காணப்பட்டதால் சார்ங்க தேவன் என்று இவருக்கு பெயர். மருத்கணங்களில் ஒன்றின் அம்சம் இவர்.

கோயில்களில் பலர் சென்று வேலை வேண்டும்; குழந்தை வேண்டும்; கல்யாணம் ஆக வேண்டும்; நோய் தீர வேண்டும்; நான் சொல்வது பலிக்க வேண்டும் என்று பிரார்த்திப்பர். இன்னும் சிலரோ, பகவானே! பிறவி வேண்டாம். ஞானம் கொடு. பக்தி கொடு. முக்தி கொடு என்று வேண்டுவர். அபூர்வமாய் சிலர் பகவானிடம் சித்திகளை தருமாறு கேட்பர். பகவானை நோக்கி செல்பவனுக்கு சித்திகள் பெரிய தடை.

ஆன்மீக வாழ்வில் ஈடுபடுவதால்தானே ஒருவனுக்கு சித்திகள் வருகின்றன. அப்படியெனில் இதில் ஈடுபடுவது எப்படி தவறாகும்? என்று ஒருவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் கேள்வி கேட்டார். சாப்பிடுவது ஆரோக்யமாக

இருப்பதற்குத்தானே. சாப்பிடுவதாலும் தீர்த்தம் குடிப்பதாலும் மல, மூத்ரங்கள் வருகின்றன. மல, மூத்ரங்களுக்காக ஒருவன் சாப்பிடுகிறான் என்று சொல்ல முடியுமோ? மல, மூத்ரங்கள் கழிவு; அவை தள்ளப்பட வேண்டியவை. அப்படிப்பட்டதுதான் சித்திகள். மனோ நாசத்திற்காக பாடுபடும் ஒரு ஆன்மீக சாதகனுக்கு அவனுக்கு ஏற்படும் சித்திகள் பெரும் தடை என்றார் ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

ரமண மஹரிஷிகளும் இதை அழகாக சொல்கிறார். தெருவில் மைவித்தை காண்பிப்பவன், ஒரு மா இலையில் மை தடவி, ஒரு கூடையில் கவிழ்த்து வைத்து மூடுவான். எல்லோரையும் கூப்பிட்டு கைத்தட்ட சொல்வான். சிறிது நேரத்தில் பார்த்தால், அங்கு அதிசயமாக ஒரு மரம் முளைத்து பழமும் அதில் இருக்கும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். அந்த வித்தை காண்பித்தவனுக்கு இந்த மரம் எப்படி வந்தது என்று தெரியும். அதனால் அவனுக்கு ஆச்சரியம் இருக்காது. இருந்தாலும் தனக்கும் ஆச்சரியம் வந்தது போல நடிப்பான். இப்படி மை வித்தை காண்பிப்பவன் பிறரை ஏமாற்றுகிறான். ஆனால், சித்திகளில் மயங்குபவனோ தானும் ஏமாந்து, பிறரையும் ஏமாற வைக்கிறான் என்கிறார் ரமணர். (தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

## சனாதனப்புதிர் பகுதி 88 -- விடைகள் -ஆத்ரேயன்

1. தான் இருக்கும் இடத்தை விட்டு எங்கும் செல்லாத மஹான்கள்; ஸ்ரீரமண மஹரிஷிகளை போல.
2. சமீ விருக்ஷம் என்ற வன்னி மரம்; யாகத்திற்கு வேண்டிய அக்னி அதில் இருக்கிறது.
3. அன்னதானம்.
4. அஹிம்சை, புலனடக்கம், ஜீவராசிகளிடத்தில் கருணை, பொறுமை - மன்னிக்கும் குணம், தியானம், தவம், ஞானம், சத்தியம் - இவை பகவான் விஷ்ணுவிற்கு பிடித்த பூக்கள்.
5. கிருத்திகா நக்ஷத்திரம்.
6. 120 வயது; பாதியில் நடப்பது சஷ்டியப்த பூர்த்தி.
7. ஸ்வாதி; நரசிம்ம அவதாரம்.
8. நாராயணாய வித்மஹே, வாஸுதேவாய தீமஹி, தன்னோ விஷ்ணுர் ப்ரசோதயாது.
9. மத்தியானம் 1 மணி முதல் 3 மணி வரை உள்ள நேரத்தை. பித்ருக்களுக்கு பிரியமான காலம்.
10. பகவத் குண தர்ப்பணம்.

## சனாதனப்புதிர் பகுதி 88 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. அஜகர வ்ருத்தி என்று யாரை கூறுகிறார்கள்?
2. அரணிக்கட்டை எந்த மரத்தில் இருந்து எடுக்கப்படுகிறது?
3. எல்லா தானத்திலும் உன்னதமாக கருதப்படும் தானம் எது?
4. பகவான் விஷ்ணுவிற்கு பிடித்த எட்டு விதமான பூக்கள் எவை?
5. வேதத்தில் எந்த நக்ஷத்திரம் முதலாவதாக சொல்லப்பட்டு இருக்கிறது?
6. மனிதனுடைய பூரணமான ஆயுள் எவ்வளவு வருடம்? அதில் பாதியில் நடக்கும் வைதீக காரியம் என்ன?
7. வாயு பகவானுடைய நக்ஷத்திரம் என்ன? அந்த நக்ஷத்திரத்தில் எந்த அவதாரம் நடந்தது?
8. விஷ்ணு காயத்ரி என்று எதை சொல்லுகிறார்கள்?
9. குதம காலம் என்று எதை சொல்லுகிறார்கள்? அது யாருக்கு விசேஷமானது?
10. பராசர பட்டர் விஷ்ணு சஹஸ்ர நாமத்திற்கு எழுதிய பாஷ்யத்தின் பெயர் என்ன?

# பாலகர்களுக்கு ஒரு கதை



## போலி எது!

அக்ஷய் ஒரு சிறந்த சிற்பி. அவன் தன் தந்தையிடம் இருந்து அந்த கலையை வெகு நன்றாக கற்று கொண்டிருந்தான். எந்த ஒரு சிலையையும் அவன் மிகவும் தத்ரூபமாக செய்து விடுவான். அவன் செய்யும் சிலைகளில் குறையே இருக்காது. அவன் ஒன்றை செய்தால் அசலுக்கும் அவன் சிலைக்கும் வித்யாசமே இருக்காது. அந்த அளவுக்கு அனைவரும் பிரமிக்கும்படியான சிற்பி அவன்.

அந்த கலைத்திறமை தன்னிடம் அபரிமிதமாக இருந்தமையினால் அவன் கர்வம் கொண்டிருந்தான். யாரிடமும் மரியாதையாக பேசாமல் எடுத்து எறிந்து பேசி விடுவான். ஆனாலும் அவன் சொன்னபடி செய்து கொடுத்து வந்ததினால், தன் தொழிலில் மிகவும் சிறப்பான பெயர் எடுத்திருந்தான்.

ஒருநாள் அவனுக்கு ஒரு விபரீதமான கனவு வந்தது. அதை பார்த்ததிலிருந்துதான் அவன் குழப்பமான மன நிலையில், தனிமையில் இருந்து வந்தான். அவன் மனைவி, மக்கள் எல்லாம் அவனை என்னவென கேட்டு நச்சரித்தபொழுதிலும், அதை பற்றி அவன் பேசாது இருந்தான்.

தனக்கு மரணம் ஒரு மாதத்திற்குள் நிகழப்போவதாக அவன் கனவு கண்டிருந்தான். ஏனோ அவன் அது நிஜமாக நடக்க போகிறது என நம்பினான். இதுவரையிலும் யாரையும் தன் திறமையினால் வென்ற அக்ஷய், மரணத்தையும் வென்று விட தீர்மானித்தான்.

கனவு வந்து சில நாள் கழித்து ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் அவன், ஒரே மாதிரியான பத்து கற்களை தேர்ந்தெடுத்தான். அவன் மிகவும் பொறுமையாக அந்த கற்களில் சிலை வடிக்க ஆரம்பித்து இருந்தான். பத்து கற்களிலும் அவன் வடித்தது ஒரே மாதிரியாக இருந்தது. இறுதியில் அவன் அந்த சிலைகளை வடித்து முடித்தபொழுது, யாராவது அவைகளை பார்த்திருந்தால், ஆச்சரியப்பட்டு

போயிருப்பார்கள். காரணம், அந்த சிலையில் இருந்தது போலவே அவன் இருந்தான். கண்ணாடியில் தெரியும் நிஜ பிம்பம் போல இருந்தன அச்சிலைகள். அச்சிலைகளை கூர்ந்து சோதித்த அவன் ஒரு சிலையை மட்டும், தள்ளி தூரமாக வீசி விட்டான். அவனுக்கு அது பிடிக்கவில்லை போலும்.

சரியாக ஒரு மாதம் ஆனபின், அவன் அந்த சிலைகளுடன் ஒன்றாய் போய் படுத்து விட்டான். அந்த சமயம் எமதூதன், அவன் உயிரை பறிக்க வந்தான். வந்த அவன் சிலைகளை பார்த்து குழம்பி போனான். எது உண்மையான உயிருள்ள அக்ஷய், எது சிலை என அந்த தூதனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

வெகு நேரம் கழித்து கண்டுபிடிக்க முடியாமல் அந்த எமதூதன் எமலோகம் சென்று தர்மராஜனிடம் தன் நிலையை எடுத்து சொன்னான். அப்பொழுது, தர்மராஜனே கீழே இறங்கி வந்தான்.

அவனாலும் கண்டுபிடிக்க முடியாத அளவு சிலைகள் ஒன்றாகவே இருந்தன. சுற்றுமுற்றும் பார்த்த தர்மராஜனுக்கு ஒரு சிலை வீசி எறியப்பட்டு இருப்பதை பார்த்து, நடந்திருப்பது புரிந்தது. இந்த சிலைகளில் ஒன்றுதான் உயிருள்ள அக்ஷய் என நிச்சயமாக முடிவு செய்த எமராஜன், 'ஒரு சிலையில் மட்டும் குறை வந்திருக்கிறதே' என தன் தூதுவனிடம் உரக்க சொன்னான்.

தான் செய்த சிலைகளில் குறை இருக்கிறது என்பதை கேட்ட, அக்ஷய்யினால் அதை சகித்து கொள்ள முடியவில்லை. அவனுக்கு கோபம் வந்தது. எந்த சிலையில் குறை? என அவன் சிந்திக்க சிந்திக்க அவன் தற்பெருமை அவன் கோபத்தை மேலும் மேலும் கிளற, சில நிமிட நேரம் கழித்து சட்டென எழுந்த அவன், எமராஜனை பார்த்து 'எந்த சிலையில் குறை' என்றான்.

உடனே அக்ஷய்யை இறுக பிடித்த எமராஜன், 'அகந்தை நிலை, ஒரு ஜீவனையும் உயிரற்ற சிலையாகவே ஆக்கும்' என்று செய்தே காட்டி விட்டான்! 'நான்' 'எனது' இவைகளை தவிர்த்தால், கண்ணனுடன் எப்போதும் வசிக்கலாமே!

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

ஸ்ரீ ஹரி பாபாஜி - 7

ஒரு முறை அந்த பகுதிகளில் ஒரே வறட்சியின் காரணமாக மக்கள் தவித்து பாபாவை அணுகி, மஹாராஜ்! ஏதாவது செய்யுங்கள். இல்லாவிடில், எத்தனை குடிகள் வீணாகுமோ! எத்தனை உயிர்கள் பலியாகுமோ! சொல்ல முடியாது! என்று ப்ரார்த்தித்தனர். பாபா அவர்களிடம் நாம பகவான் உங்களோடு இருக்கிறார். பின் என்ன கவலை? அவரது க்ருபையால் அஸம்பவமானது என்று ஏதாவது உண்டா என்ன? அவரை சரணடைந்து நிச்சிந்தையாக இருங்கள் என்று கூறினார்.

பின்பு பலருடனும் கலந்தாலோசித்து, பாபாவுடன் நான்கு பக்தர்கள் ஏழு நாட்களுக்கு பாலை மட்டும் அருந்தி நாம கீர்த்தனம் செய்து கொண்டே ஊரை சுற்றி வலம் வருவது என்று நிச்சயம் ஆயிற்று. மாலையில் கதாகாலக்ஷேபத்தின் போது மட்டும் அமர்ந்து கொள்வது என்றும் முடிவாயிற்று. எட்டாவது நாள் கிராமம் முழுவதும் சேர்ந்து அகண்ட நாமகீர்த்தனமும் ஸமஷ்டி போஜனமும் செய்வது என்றும் நிச்சயிக்கப்பட்டது. அதே போல் நாம கீர்த்தனம் நடந்தது. எட்டாவது நாள் இரவு 12 மணிக்கு எங்கிருந்தோ மேகங்கள் கூடின. இடி மின்னலுடன் பலத்த மழை பெய்யத் தொடங்கியது.

லாலா குந்தன்லால் என்பவர் பஜனையில் பெரும் நிஷ்டையுடையவர். ஸாதுக்களையே தெய்வமாக வழிபடுபவர். பாபா அவரை மிகவும் மதிப்பார். ஒரு முறை அவர் பேரன் ராமேஸ்வருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. 14மாத காலமாக எத்தனையோ ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து வைத்தியம் செய்தும் எந்த ஒரு பலனும் இல்லை. கல்கத்தாவின் பிரபல டாக்டர்களாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பொழுது பாபா அந்த சிறுவனை உத்தேசித்து சில நாட்களுக்கு அகண்ட நாம கீர்த்தனம் ஏற்பாடு செய்யும்படி ஆலோசனைக் கூறினார். அதற்கான ஏற்பாடும் ஆயிற்று. மூன்று மாத காலத்திற்கு தொடர்ந்து நாம கீர்த்தனம் நடந்தது. ஆனால் அந்த சிறுவனின் உடல் நிலையில் எந்த

முன்னேற்றமும் ஏற்படவில்லை. கீர்த்தனம் செய்பவர்களும் சோர்ந்துவிட்டார்கள். வீட்டில் உள்ளவர்களும், நம்பிக்கை இழக்க ஆரம்பித்துவிட்டனர். பாபாவின் ஆக்ஞையை தட்டாமல் செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, கீர்த்தனத்தை இழுத்து கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட பாபா, 'இப்படி கீர்த்தனம் செய்வதால் என்ன பலன்? நாமத்தில் நம்பிக்கையே இல்லாமல் நாமகீர்த்தனம் செய்வதால், நாம அபசாரம்தான் ஏற்படும். உண்மையில் ராமேஸ்வருக்கு உடல் நிலை சரியாக வேண்டும். அவனை காப்பாற்ற வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், உயிரை பணயம் வைத்து, சிரத்தையுடன் நாம கீர்த்தனம் செய்யுங்கள். அவன் தேறிவிடுவான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை' என்று கூறினார்.

பாபாவின் வார்த்தைகளை கேட்டவுடன் புது உற்சாகத்துடன் நம்பிக்கையுடன் நாமகீர்த்தனம் தொடங்கியது. ராமேஸ்வரனை ஒரு சாய்வு நாற்காலியில் படுக்க வைத்து, கீர்த்தனம் நடக்கும் இடத்திற்கு அழைத்து வந்தனர். நடுநடுவில் பாபாவும் கீர்த்தனத்தில் பங்கேற்று, அனைவரையும் உற்சாகப்படுத்தினார். ஒரு நாள் பாபா ஒரு பெரிய மணியை அடித்துக் கொண்டே கீர்த்தன மண்டலியின் நடுவே ஒரு சக்கரத்தை போல் சுழன்று கொண்டிருந்தார். அதே சமயம் நிஜாம்பூரைச் சேர்ந்த பக்தரான குபீராமுக்கு விசித்ரமான ஆவேசம் ஏற்பட்டது. அவர் ஆடிக்கொண்டே, ராமேஸ்வர் அருகில் சென்று அவனை நோக்கி, 'நாங்கள் அனைவரும் பகவானின் கீர்த்தனத்தில் ஆடிக் கொண்டிருக்கிறோம். நீ என்னவோ ஒய்யாரமாக நாற்காலியில் அமர்ந்து கொண்டிருக்கிறாய். பெரிய வீட்டு பிள்ளை என்ற கர்வமோ' என்று அவனை அதட்டி, இரண்டு அடி கொடுத்து, கீர்த்தனத்தின் நடுவில் வலுவாக அவனை இழுத்து வந்து நிறுத்திவிட்டார். நின்றவுடன் ராமேஸ்வரின் கால்கள் முதலில் நடுங்கின. சீக்கிரமே அவன் சமாளித்து கொண்டதோடு மட்டுமல்லாமல் ,கைகளை உயர்த்தி நடனமும் செய்யலானான். 18 மாதங்களாக பாயிலிருந்து எழவே முடியாத நிலையிலிருந்த அவன், இன்று உன்மத்தனாக ஆடுவதைக் கண்டு, எல்லாரும் ஆச்சர்யத்திலும் ஆனந்தத்திலும் அமிழ்ந்தனர். அப்போதிலிருந்து அவன் முழுமையாக குணமடைந்துவிட்டான்.

(தொடரும்)

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**Email:helpdesk@madhuramurali.org**

**Ph: "24895875" SMS '9790707830'**


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**சத்சங்க நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | ஆகஸ்டு 14 & 28 செப்டம்பர் 13 & 27<br>August 14 & 28 September 13 & 27 |
| ஆகஸ்ட் 2 | கோவிந்தபுரம் யோகிராம்சுரத்குமார் மையத்தில் ஸ்ரீராஜமாணிக்கம் நாடார் அவர்களின் பிறந்த நாள் சிறப்பு விழா வைபவம் |
| ஆக 19 - 26 | சேங்கனூரில் ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்களின் 83ஆவது ஜயந்தி |
| ஆக26–செப்4 | மதுரபுரியில் கோகுலாஷ்டமி உற்சவம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.

Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org எனும் முகவரிக்கு அனுப்பவும்.